தினகரன் புதுவை

# உழவர்கரை நகராட்சி சார்பில் வேலைவாய்ப்பு முகாம்



உழவர்கரை நகராட்சி சார்பில் நடந்த வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப் பட்டவர்களுக்கு இறுதி தேர்வுக்கான கடிதத்தை உள்ளாட்சி ஆணையர் மலர்க்கண்ணன் வழங்கினார். அருகில் நக்ராட்சி ஆணையர் கந்தசாமி.

## இறுதிச்சுற்றுக்கு 15 பேர் தேர்வு

**புதுச்சேரி, பிப். 13:** உழவர்கரை நகராட்சி மற்றும் நவயுகா கன்சல்டன்சி சர்வீஸின் நகர வாழ்வாதார மையம் சார்பில் நவீன சுகாதார மீன் அங்கன்வாடி வளாகத்தில் புதிதாக திறக்கப்பட்ட நகர வாழ்வாதார மையத்தில் சென்னை டெக் மஹேந்திரா நிறுவனத்தின் தொலைத்தொடர்பு செயல்பாட்டின் வாடிக்கையாளர் சேவை பணிக்கான வேலைவாய்ப்பு முகாம் நேற்று நடந்தது. உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி, நவயுகா கன்சல்டன்சி சர்வீஸ் மேலாண் இயக்குனர் மோகன்தாஸ் ஆகியோர் வேலைவாய்ப்பு முகாமை துவக்கி வைத்தனர். காலை 9 மணிக்கு துவங்கிய முகாம் மாலை 3 மணி வரை நடைபெற்றது. இதில் 12ம் வகுப்பு முதல் பட்டம் முடித்தவர்கள் வரை சுமார் 150க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் பங்கு பெற்றவர்களுக்கு குழு விவாத சுற்று, தொலைபேசி சுற்று என பல விதமான நேர்காணல் சுற்றுகள் நடத்தப்பட்டது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்று அனைத்து சுற்றுகளிலும் வெற்றி பெற்ற 15 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு இறுதி தேர்வுக்கான கடிதத்தை உள்ளாட்சி துறை இயக்குநர் மலர்க்கண்ணன் வழங்கினார். இறுதியாக தேர்வு செய்யப்படும் அனைவருக்கும் சென்னையில் உள்ள டெக் மகேந்திரா நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்டு அவர்களுக்கு மாத சம்பளமாக ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை வழங்கப்படும்.

# அனுமதி பெறாத குடிநீர் இணைப்புகள் துண்டிப்பு

## உழவர்கரை நகராட்சி ஆணையர் எச்சரிக்கை

புதுச்சேரி, பிப். 13: உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: உழவர்கரை நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரும்பார்த்தபுரம், பிள்ளைச்சாவடி, காலாப்பட்டு மற்றும் ஆலங்குப்பம் உள்ளிட்ட வார்டுகளில் இந்நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வருகிறது. மேற்கண்ட வார்டுகளில் பல குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் பல குடியிருப்புகள் நகராட்சியின் அனுமதியின்றி இணைப்புகள் எடுத்துள்ளார்கள். மேற்கூறிய வார்டுகளில் அனுமதியின்றி குடிநீர் இணைப்பு எடுத்துள்ளவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி அனுமதியில்லாத இணைப்பை முறைப்படுத்திக் கொள்ள இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

உழவர்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி குடிநீர் இணைப்பு எடுத்துள்ளவர்கள் உரிய வகையில் விண்ணப்பித்து வரும் 30 நாட்களில் இணைப்பினை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் அபராதம், இணைப்பு துண்டித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை தவிர்க்கலாம். மேலும் மத்திய அரசு நாட்டின் அனைத்து கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு வரும் 2024ம் ஆண்டுக்குள் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் இலக்கினை அடைய 'ஜல ஜீவன்' திட்டத்தை தொடங்கியுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக புதுச்சேரி உள்ளாட்சித்துறை செயலர் மற்றும் இயக்குநர் அறிவுறுத்தலின்படி உழவர்கரை நகராட்சி பகுதியில் அனுமதியின்றி எடுக்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகள் போர்க்கால அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டு உள்ளது. எனவே, அனுமதியின்றி எடுக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் முறைப்படி விண்ணப்பித்து இணைப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். இணைப்புக்கான விண்ணப்பங்கள் உழவர்கரை நகராட்சி அலுவலகத்திலும் மற்றும் *www.oulmun.in* என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த வாய்ப்பினை பயன்படுத்த தவறினால் எவ்வித முன்னறிவிப்புமின்றி அனுமதி பெறாத குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.